# நீங்கள் வெளிநாட்டில் தடுப்பூசி போட்டிருந்தால் உங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கான ஆதாரத்தை எப்படிக் காட்டுவது

அக்டோபர் 1, 2020 அன்று அல்லது அதற்குப் பிறகு வெளிநாட்டில் இருக்கும்போது, அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்று, **ஆஸ்திரேலியா பயண உறுதி ஆவணம் (Australia Travel Declaration)** ஒன்றுடன் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைந்திருந்தால், அதை உங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கான சான்றாகப் பயன்படுத்தலாம். ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில் (AIR) உங்கள் தடுப்பூசியைப் பதிவுசெய்ய, கீழேயுள்ள படிமுறைகளையும் நீங்கள் பின்பற்றலாம், மேலும் உங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கான ஆதாரமாகக் காட்ட, **கோவிட்-19 மின்னியல் சான்றிதழ் (digital certificate)** ஒன்றையோ அல்லது **நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையையோ** பெறவும்.

**1** நீங்கள் வெளிநாட்டில் பெற்ற தடுப்பூசி, ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதா எனச் சரிபார்க்கவும் (தற்போதுள்ளவை ஃபைசர் (Pfizer), அஸ்ட்ராஜெனெகா வக்ஸ்செவ்ரியா (AstraZeneca Vaxzevria), மாடர்னா (Moderna), ஜான்சென்-சிலாக் (Janssen-Cilag), சினோவாக் கொரோனாவாக் (Sinovac Coronavac), அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் (AstraZeneca Covishield), சினோஃபார்ம் (Sinopharm) மற்றும் பாரத் பயோடெக் (Bharat Biotech)).

**2** உங்கள் தடுப்பூசியின் ஆவணம் வேறு மொழியில் எழுதப்பட்டிருந்தால், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும். இலவச மொழிபெயர்ப்புச் சேவையைப் பயன்படுத்த நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைப் பார்க்க translating.homeaffairs.gov.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

**3** உங்கள் தடுப்பூசியை AIR -இல் பதிவு செய்ய, அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி வழங்குநர் ஒருவரிடம் (எடுத்துக்காட்டாக, ஒரு பொது மருத்துவர் அல்லது ஒரு மருந்தாளுநரிடம்) கேட்கவும். அது உங்கள் கோவிட்-19 மின்னியல் சான்றிதழ் மற்றும் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையில் இடம்பெறும்.

**4** பின்வரும் முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தி, உங்கள் சான்றிதழ் அல்லது அறிக்கையை அணுகவும்:

| myGov வழியாக உங்கள் ‘மெடிகேர்’ இணையக் கணக்கு | ‘எக்ஸ்பிரஸ் பிளஸ்’ மெடிகேர் கைப்பேசிச் செயலி (mobile app) | தனிப்பட்ட ‘ஹெல்த்கேர்’ அடையாளங் காட்டிச் சேவை (நீங்கள் மெடிகேருக்குத் தகுதி பெறவில்லை என்றால்) |
| --- | --- | --- |
| 1. **my.gov.au** என்ற இணையதளத்துக்குச் சென்று, உள்புகவும் (sign in)<br>2. **‘கோவிட்-19 தடுப்பூசிக்கான ஆதாரம்’ (Proof of COVID-19 vaccination)** என்ற துரித இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்<br>3. **‘வரலாற்றைக் காணவும்’ (View history)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்<br>4. உங்கள் **பெயரைத்** தேர்ந்தெடுத்து, **நோய்த்தடுப்பு வரலாறு அறிக்கையை** அல்லது **கோவிட்-19 மின்னியல் சான்றிதழைப் பார்க்கவும்.** | 1. **‘எக்ஸ்பிரஸ் பிளஸ்’ மெடிகேர் செயலியில் (Express Plus Medicare app)** உள்புகவும் (sign in)<br>2. சேவைகளிலிருந்து **‘தடுப்பூசிகளுக்கான ஆதாரம்’ (Proof of vaccinations)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்<br>3. **‘வரலாற்றைக் காண்க’ (View history)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்<br>4. உங்கள் **பெயரைத்** தேர்ந்தெடுக்கவும். | 1. **my.gov.au** என்ற இணையதளத்துக்குச் சென்று, உள்புகவும் (sign in)<br>2. **தனிப்பட்ட ‘ஹெல்த்கேர்’ அடையாளங் காட்டிச் சேவையைத் (Individual Healthcare identifiers service)** தேர்ந்தெடுக்கவும்.<br>3. **நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையைத் (Immunisation history)** தேர்ந்தெடுக்கவும். |

குறிப்பு: நீங்கள் மெடிகேருக்குத் தகுதிபெறவில்லையென்றால், மற்றும் இணையத்தில் உங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கான ஆதாரம் தேவைப்பட்டால், உங்களுக்கு ஒரு தனிப்பட்ட சுகாதார அடையாளங்காட்டி (IHI) தேவைப்படும். நீங்கள் myGov மூலம் IHI பெறலாம். மேலும் தகவலுக்கு servicesaustralia.gov.au/covidvaccineproof செல்லவும்

**5** கோவிட்-19 தடுப்பூசி போட்டதற்கான ஆதாரத்தைச் சேமிக்கவும். உங்கள் ‘ஆப்பிள் வாலட்’ (Apple Wallet) -இல் அல்லது 'கூகுள் பே’ (Google Pay)-இல் உங்கள் சான்றிதழைச் சேர்க்கலாம் அல்லது ‘எக்ஸ்பிரஸ் பிளஸ்’ மெடிகேர் கைப்பேசிச் செயலியில் (Express Plus Medicare mobile app) சேமிக்கலாம்.

நீங்கள் வளாகங்களில் உள்நுழைவுப் பதிவு செய்யும்போது (check in), விரைவாகவும் எளிதாகவும் ஆதாரத்தைக் காட்ட, சேவை நியூ சவுத் வேல்ஸ் செயலியிலும் (Service NSW app) உங்கள் தடுப்பூசிக்கான ஆதாரத்தையும் சேர்க்கலாம். இதை எப்படி செய்வது என்பதை nsw.gov.au/covidvaccineproof -இல் தெரிந்துகொள்ளவும்.

மாற்றாக, உங்கள் சான்றிதழ் அல்லது அறிக்கையின் நகலை வீட்டிலேயே அச்சிடலாம். myGov அல்லது ‘எக்ஸ்பிரஸ் பிளஸ் மெடிகேர்’ செயலி மூலம் உங்கள் ‘மெடிகேர்’ இணையக் கணக்கைப் பயன்படுத்தி PDF ஒன்றைப் பதிவிறக்கம் செய்யவும், பின், இதை அச்சிட்டு உங்களுடன் எடுத்துச் செல்லவும். கருப்பு - வெள்ளை நகல் ஏற்றுக்கொள்ளப்படும்.

மருத்துவ முரண்பாட்டின் (medical contraindication) காரணமாக உங்களால் கோவிட்-19 -க்கு எதிராகத் தடுப்பூசி போட முடியாவிட்டால் (அதாவது. மருத்துவ காரணங்களுக்காக நீங்கள் கோவிட்-19 தடுப்பூசிகள் எதையும் வைத்திருக்க முடியாது), இந்த முரண்பாட்டை AIR -இல் பதிவு செய்யும்படி உங்கள் மருத்துவரிடம் நீங்கள் கேட்கலாம். அது உங்கள் சான்றிதழிலும் அறிக்கையிலும் தோன்றும்.

**> கோவிட் பாதுகாப்பாக இருக்க நியூ சவுத் வேல்சுக்கு உதவவும்**

மேலும் தகவல்களுக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: **nsw.gov.au/covidvaccineproof**

NSW GOVERNMENT